## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசயையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து அதிகார சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபை தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகார சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டியதுடன் அவ் வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகார சபை செயற்படுகின்றதாளனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனத்தில் 49 சதவீதம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசயைிடம் காணப்பட்டாலும், அந் நிறுவனத்தின் தொடர்புடைய நிறுவனமாக கருதப்பட்டு கணக்கு வைத்தல் அல்லது அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் போதுமான வெளிப்படுத்தல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் வங்கி இலங்கை மத்திய வங்கியின் கீழ் நேரடி மேற்பார்வைக்கு உட்படுவதனால் மற்றும் சட்டமொன்றினால் நிறுவப்பட்டுள்ளதனால் நீண்ட கால முதலீடாக கருதி கணக்கு வைக்கப்படும். | தொடர்புடைய நிறுவனம் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய ரூபா 1.32 மில்லியன் நிலையான வைப்பு வட்டி நிதிக் கூற்றுகளுக்கு உட்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அத்துடன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இல் 48 பந்திக்கு முறன்பாடாக 1984 வருடத்திலிருந்து 2002 ஆம் வருடம் வரை அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து பெறவேண்டிய ரூபா 104.36 மில்லியன் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 52.51 மில்லியன் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு ரூபா 51.84 மில்லியன் செலுத்தப்பட வேண்டிய மீதியொன்று மீளாய்வாண்டின் நிதிக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | புலமைபரிசில் நிதியத்திற்கு தொடர்புடைய நிலையான வைப்பு வட்டி அக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபை பெயரில் ஒட்டுமொத்த மீதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய மீதிகள் வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டும் |
| (இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுக்கு முறன்பாடாக காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயல்பாடுகளினால் உருவாக்கப்பட்ட நிகர காசுப் பாய்ச்சலை கணக்கிடப்படும் போது செய்யப்பட்டு வருகின்ற வேளை கணக்கில் கட்டிட கணக்கிற்கு மாற்றப்பட்ட ரூபா 20.63 மில்லியன் காசு அல்லாத கொடுக்கல் வாங்கல் பெறுமதியும் காசுப் பாய்ச்சலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட காசுப் பாய்ச்சலை தயாரித்து முன்வைக்கிறேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக காசுப் பாய்ச்சல் கூற்று தயாரித்தல் வேண்டும். |
| (ஈ) பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கலாக 1987 மற்றும் 1988 வருடங்களில் கையகப்படுத்ததப்பட்டிருந்த ஹன்தான விடுமுறை விடுதிக்கு சொந்தமான 170.56 பர்சஸ் காணியின் பெறுமதி மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 2,520 என நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்தாலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 27 மற்றும் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நியாயமான மதிப்பு கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் காணி கையகப்படுத்ததப்பட்ட சந்தர்ப்பத்திலேயே பெயரளவு மதீப்பீடு குறிக்கப்பட்டிருந்தது. மதீப்பீட்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக சொத்துக்கள் மறு மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுகளுக்கு காண்பிக்கப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 இல் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இறுதி இருப்பு பெறுமதி செலவு அல்லது நிகர கணிசமான பெறுமதியை விட குறைந்த பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். எனினும் அதிகார சபையின் இருப்புக்களில் உள்ளடக்கப்பட்ட பார்க் ரொட்னியில் அமைந்துள்ள 08 கடைகளில் நிகர கணிசமான பெறுமதி கணக்கிடப்படாமல் அதின் செலவாகிய ரூபா 6.1 மில்லியன் ஆன பெறுமதி இருப்பின் பெறுமதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இவ் இருப்புக்களின் மதீப்பீடு அறிக்கைகளை பெற்றுக்கொண்டு கணக்கிலிடுகின்றேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக கணக்கு வைத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 13 இற்கு அமையாதவாறு அதிகார சபையினால் 2018 ஆம் ஆண்டில் கூலி / குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை 6.21 மில்லியன் பெறுமதியான 08 வீட்டுச்சொத்து அலகுகள் மற்றும் மொரட்டுவ மற்றும் மாளிகாவத்தையில் கூலி அடிப்படையில் அப்புறப்படுத்துவதற்குரிய 25 கடைகளின் பெறுமதி முதலீட்டு சொத்தாக நிதிக் கூற்றுக்கனல் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இச் சொத்து விற்கப்படவுள்ளது. விற்கும் வரையில் கூலி/ குத்தகை அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக முதலீட்டுச் சொத்துக்களின் கணக்கு வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்ளைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையினால் விற்பதற்காக மற்றும் வீட்டுத்திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்ட காணிகளின் பெறுமதிக்கு அக் காணியின் அபிவிருத்திக்காக ஏற்கப்பட்ட செலவும் உள்ளடக்கப்பட்டு அபிவிருத்தி சொத்தாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் அதிகார சபையின் கொள்கையாயினும், அக் கொள்ளைக்கு இணங்காத வகையில் அதிகார சபைக்கு கையகப்படுத்தப்படாத காணிகளில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி செலவு ரூபா 156.84 மில்லியன் காணி அபிவிருத்தி கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | விரைவான திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்படல் நடவடிக்கைகளுக்கு இணையாக காணி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் அச் செலவு காணி அபிவிருத்தி கணக்கில் கணக்கிடப்பட்டுள்ளது. | அதிகார சபையின் கணக்கீட்டுக் கொள்ளைகளுக்கு அமைவாக கணக்கிலிடப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக் கூற்றுடன் காணி மற்றும் கட்டிடங்களுக்கு தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த குறிப்பின் படி காணிகளின் பெறுமதி ரூபா 55.3 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தாலும் அதிகார சபையின் நிலையான அலுவலக கட்டிடம் மற்றும் கூலி கட்டிடம் அமைநதுள்ள 33 காணித் துண்டுகளில், வீடு திட்ட அறிக்கை முறைகளில் இன்னும் பயன்படுத்தப்படாது எஞ்சி காணப்பட்ட காணி மற்றும் தேசிய வீடமைப்பு | பட்டய மதிப்பீட்டாளர் ஒருவர் அல்லது மதீப்பீட்டு நிறுவனமொன்று தெரிந்துக்கொண்டு காணி மற்றும் கட்டிடங்களின் சரியான மதிப்பீடொன்று செய்யப்பட்டு கணக்கிலிடப்படும். | ஆதிகார சபைக்கு சொந்தமான சொத்துக்களை அடையாளப்படுத்தி அவற்றின் மதிப்பீட்டு பெறுமதிகள் கணக்கிலிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானது என இணங்காணப்பட்ட 437.7 ஹெக்டயார் காணி பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிலிடப்பட்டிருக்கப்படவில்லை. | | |
| (ஆ) வேறு நிறுவனங்களில் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக அதிகார சபைக்கு 23 நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 705.69 மில்லியன் மீளாய்வாண்டு இறுதியில் வேறு வழங்களின் கீழ் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அக் கணக்கிற்கு ரூபா 9.88 மில்லியன் பெறப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 6.95 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு அதிகார சபையின் வருமானம் மற்றும் செலவுக்குள் உள்ளடக்கபடாததுடன் நிகர மீதி மட்டும் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்துது. எனினும் அது தொடர்பாக எந்தவொரு வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இப் பணம் அதிகார சபையின் அபிவிருத்தி வேளைகளுக்கு நேரடியாக தொடர்பாகாததனால் வருமான செலவு கணக்குகளில் குறிப்பிடப்படாமல் பண பெறுவனவு மற்றும் கொடுப்பணவாக மட்டும் குறிப்பிடல். | விசேட கொடுக்கல் வாங்கல் தொடர்பாக போதுமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளல் வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டில் 05 மாவட்ட அலுவல்களில் மற்றும் சுற்றுலா பங்களாவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கட்டுமான வேளைகளின் கூட்டுத்தொகை ரூபா 20.91 மில்லியன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேளையாக கணக்கிலிடப்படுவதற்கு பதிலாக நடைமுறை சொத்தின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய கட்டிடம் சம்பூர்ணமாக நிர்மாணிக்கப்பட்டு, கட்டணங்கள் செலுத்தப்பட்டு முடிந்தவுடன் நிலையான சொத்துக்களுக்கு மாற்றப்படும். | நிலையான சொத்துக்களுக்கு தொடர்புடைய நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வேளைகள் சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **மில்லியனில்** | **மில்லியனில்** | **மில்லியனில்** | | |
| (அ) ஏனைய மானியங்கள் (வெவ்வேறு நபர்களிடமிருந்து பெறுவவு) | 17.84 | 13.28 | 4.56 | சரியான பிண்ணினைப்பை முன்வைக்கிறேன் | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகள் பயன்படுத்திய ஆவணங்களுடன் ஒப்பிட்டு வேறுபாடுகளை சீராக்க |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) செவன மானிய செலவு | 3.51 | 8.27 | 4.76 | சரியான பிண்ணினைப்பை முன்வைக்கிறேன் | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகள் பயன்படுத்திய ஆவணங்களுடன் ஒப்பிட்டு வேறுபாடுகளை சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) செலுத்தப்பட வேண்டிய கடன் (திரிபியச) | 10.13 | 13.96 | 3.83 | இக் கடன் திட்டங்களுக்கமைய செலுத்தப்படாத கடனுக்காக வங்கி மற்றும் அதிகார சபை சமனாக ஏற்கப்படல் வேண்டியதனால் செலுத்தப்பட வேண்டிய கடனில் 50 சதவீதம் வங்கிக்கு தொடர்புபடுதிதப்பட்டுள்ளது. | கடன் உடன்படிக்கையின் படி சரியான கடன் மீதியை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.5.5 ஒருங்கிணைப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாக நிறுவனமான ஓஷன் வீச் டிவலொப்மன்ட் நிறுவனத்தின் நிதி அறிக்கை 2019 மே மட்டும் பெற்றுக் கொடுக்கப்படாததினால் கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றை அடிப்படையாக கொண்டு ஒருங்கிணைந்த நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | 2019 இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது 2018 திசெம்பர் 31 திகதிக்கு கணக்காய்வு செய்யப்பட்ட இறுதி கணக்குகளின் படி மீதிகள் மீண்டும் அறிக்கையிடப்படும். | நிர்வாக நிறுவனத்தின் கணக்காய்வுக்குட்பட்ட நிதிக் கூற்றுகளின் மீதிகள் ஒருங்கிணைந்த கணக்குகளை தயாரிக்க பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நிர்வாக நிறுவனத்தின் 05 பொருட்களின் பெறுமதி அந் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளின் இடையில் ரூபா 5.72 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2019 இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது 2018 திசெம்பர் 31 திகதிக்கு கணக்காய்வு செய்யப்பட்ட இறுதி கணக்குகளின் படி மீதிகள் மீண்டும் அறிக்கையிடப்படும். கணக்காய்வுக்கு | பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வுக்குட்பட்ட நிதிக் கூற்றுகளின் மீதிகள் ஒருங்கிணைந்த கணக்குகளை |

| | | |
|---|---|---|
| | பெற்றுக்கொடுக்கப்படும் கணக்கு அறிக்கையே ஒருங்கிணைந்த கணக்குகளை தயார் செய்வதற்கு யெற்றுக்கொடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | தயாரிக்க பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ)அதிகார சபையினால் தம் நிர்வாக நிறுவனத்தில் ரூபா 120 மில்லியன் முதலிடப்பட்டிருந்தாலும் 2015 மற்றும் 2016 வருடங்களில் முறையாக ரூபா 306.57 மில்லியன் மற்றும் 126.51 மில்லியன் வட்டிக்கு பின்னரான இலாபம் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தாலும் அதிகார சபைக்கு எந்தவொரு இலாபமும் கிடைக்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில் கணக்காய்வுக்குட்படாத நிதிக் கூற்றுக்களின் படி நிர்வாக நிறுவனத்தில் ரூபா 108.1 மில்லியன் வரிக்கு பின்னரான இலாபம் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 வருடத்தில் ரூபா 1.512 மில்லியன் பெறப்பட்டிருந்தது. 2018 ஆம் வருடத்தில் ஈவுத்தொகை விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. 2014, 2015, மற்றும் 2016 வருட வருமான வரி கணக்கிடப்படுதலின் படி இலாபம் உள்ளது. | நிர்வாக நிறுவனத்தின் கட்டுப்பாடு மற்றும் ஈவுத்தொகை கொள்கை தொடர்பாக அதிகார சபை பயனுள்ள வகையில் தலையிடல் வேண்டும். |

**1.5.6 கணக்காய்விற்காக ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை.**

| கிடைக்கப்பெற்ற விடயம் | தொகை ரூபா. மில்லியன் | இல்லாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) வங்கி கடன் | 270.65 | வங்கி உறுதிப்படுத்தல் | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டிருந்தும் பதில் பெறப்படவில்லை. | நிதிக் கூற்றுகளின் மீதிகளுக்கு தொடர்புடைய உறுதிப்படுத்தல் மற்றும் விரிவான பிண்ணினைப்புகளை கணக்காய்வுக்கு முன்னைத்தல் வேண்டும். |
| (ஆ) கொடை | 1,283.35 | பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் | தொடர்புடைய விரிவான பிண்ணினைப்புகளை தயாரித்து முன்வைக்கின்றேன். | |
| (இ) பெறப்பட வேண்டிய மீதி - மாவட்ட அலுவலகம் | 7.6 | விரிவான தகவல்கள் | தொடர்புடைய விரிவான பிண்ணினைப்புகளை தயாரித்து முன்வைக்கின்றேன். | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1. பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 திகதிக்கு விளம்பரப்படுத்தலுக்காக செவன ஊடக பிரிவுக்கு பெறப்பட வேண்டிய மொத்த பணத்தொகை ரூபா 55.1 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் மாதிரி கிராமங்களை திறந்து வைத்தல், அடிக்கல் வைத்தல் மற்றும் அதிகார சபையின் மற்றைய விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக செவன ஊடக பிரிவுக்கு பெறப்பட வேண்டிய நிலுவை பணம் ரூபா 39.12 மில்லியனும் அதனுள் காணப்படுகிறது. | முகாமைத்துவத்தினால் கருத்துரைகள் முன்வைக்கப்படவில்லை. | பெறப்பட வேண்டிய மீதி விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) குருநாகலை மாவட்டத்தில் ஜன உதான காணி விற்றலின் கீழ் ரூபா 4.36 மில்லியன் அறவிடப்படவுள்ளதுடன் இரத்தினபுரி கல்கடுவத்த காணிக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் ரூபா 8.69 மில்லியனாக காணப்பட்டது. அது போல அதிகார சபைக்கு சொந்தமான ரூபா 11.28 மில்லியன் பெறுமதியான 05 வாகனங்கள் உடன்படிக்கையொன்று இல்லாது, 1991 ஆம் ஆண்டிலிருந்து மாநில பொறியியல் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அவ் வாகனங்களுக்காக 2014 திசெம்பர் மாதத்தின் பின் அறவிடப்பட வேண்டிய ரூபா 854,056 அதிகார சபைக்கு பெறப்பட்டிருக்கபடவில்லை. | மாநில பொறியியல் கழகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய பணம் அக் கழகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பணத்திலிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறப்பட வேண்டிய மீதி விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் பெறப்பட வேண்டிய ஒட்டுமொத்த கடன்பட்டோர் மீதி ரூபா 4,486.72 ஆகும். அக் கடன் மீதிக்குள் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்திலிருந்து முன்கொண்டு வந்த பெறப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,064.03 ஆகும். அது முழு பெறுமதியில் 46 சதவீதமாகும். மீளாய்வாண்டில் கடன் சேர்த்தலின் கமிஷனுக்காக ரூபா 135.44 மில்லியன் செலவொன்று ஏற்கப்பட்டிருந்தது, 2018 ஆம் ஆண்டின் கடன் அறவிடலின் முன்னேற்ற அறிக்கையின் படி எதிர்பார்க்கப்பட்ட கடன் அறவிடுதல்களில் 71 சதவீதம் மட்டும் அறவிடப்பட்டிருந்தது. முழு | காலாவதியாகிய நிலுவை கடன் அறவிடப்படுதல் அதிகரிப்பதற்காக மாவட்ட அலுவலகத்தினூடாக வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும் வெவ்வேறு காரணங்களின் அடிப்படையில் அக் கடன் அறவிடல் குறைந்துள்ளது. | பெறப்பட வேண்டிய மீதி விரைவாக அறவிடப்படுவதற்கு வினைத்திறனாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கடன்பட்டோர் எண்ணிக்கையில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் எண்ணிக்கை 49 சதவீதமாக காணப்படுவதுடன் பழைய கடன் அறவிடல் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 03 வெவ்வேறு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 33 மில்லியன் அந் நிறுவனத்துடன் கலந்துரயாடப்பட்டு அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.6.2 செலுத்தவேண்டியவைகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) 05 அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் செயற் திட்டத்திற்காக பெறப்பட்ட கடனுக்காக செலுத்தப்பட வேண்டிய நிலுவைக் கடன் மற்றும் வட்டி ரூபா 855.05 மில்லியன் சீர்திருத்த அமைச்சுக்கு மற்றும் கடற்றொழில் அமைச்சுக்கு செலுத்த வேண்டியவை முறையாக ரூபா 130.91 மில்லியன் மற்றும் ரூபா 89.14 மில்லியன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் இருந்து தீர்க்கப்பட்டு இருக்கவில்லை. | அதிகார சபையின் நிதி நிலைமை அடிப்படையில் செலுத்தல்கள் தாமதமாகியுள்ளது. | செலுத்தப்பட வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு முறைப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டு இறுதியில் செலுத்தப்பட வேண்டிய மொத்த கடன் உரிமை மீதி ரூபா 1,859.29 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் உரிமை மீதி ரூபா 1,078.7 ஆகும். அதாவது மொத்த கடன் பட்டோரில் 58 சதவீதமாகும். | செலுத்தப்பட வேண்டிய கடன் மற்றும் முன்னர் பெறப்பட்ட மாநகர வீட்டுக் கூலி வருங்காலத்தில் தீர்க்கப்படும். செலுத்தப்பட வேண்டிய குத்தகை தீர்க்கப்பட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. | செலுத்தப்பட வேண்டிய மீதி தீர்க்கப்படல் முறையாக செய்யப்பட வேண்டியதோடு இன்னும் பொறுப்பாக இல்லாத செலுத்தப்பட வேண்டிய பணம் ஆராயப்பட்டு வருமானத்திற்கு உள்ளடக்கப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 முற்பணம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| அதிகார சபையினால் உள்ளக மற்றும் வெளியக | அப் பணிகள் முடிவடைந்ததுடன் ஒப்பந்த | முற்பணம் செலுத்தல் தொடர்பான உள்ளக |

| | | | |
|---|---|---|---|
| நபர்களுக்கு வெவ்வேறு காரணங்களினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட முற்பணங்களில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து முன் கொண்டுவந்த ரூபா 195.64 மில்லியன் அறவிடப்படுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டுப்பாடு முறைமைப் படுத்தல் வேண்டும். | |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் ii (பீ) உறுப்புரை மற்றும் 2003 ஜூன் 02 திகதிய PED/12 இலக்க பொது வியாபார சுற்றறிக்கையின் 8 ஆம் உறுப்புரையின் 8.2.2 பந்தி. | கூட்டுத்தொகை ரூபா 2,263.42 மில்லியன் குறுகிய கால மற்றும் நீண்ட கால முதலீடுகள் தொடர்பாக நிதி அமைச்சரிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தொடர்புடைய அனுமதியின் அடிப்படையில் முதலீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணத்தின் 395 மற்றும் 396 | வெளியிடப்பட்டிருப்பினும் தீர்க்கப்பட முன்வைக்கப்படாத 06 மாத கால எல்லை மீறப்பட்டிருந்த 14 மாவட்ட அலுவலக வங்கி கணக்குகளின் ரூபா 8.58 மில்லியன் பெறுமதியான 198 காசோலைகள் தொடர்பாக குறிக்கப்பட்ட நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட நிதி பிரமானங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் xxviii ஆவது | பழைய கோப்புக்கள் பாதுகாத்தல் மற்றும் அழித்தல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது ஆவண காப்பகங்களின் பணிகள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. அது வரையில் பழைய கோப்புக்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. | குறிப்பிடப்பட்ட சட்ட திட்டங்களுக்கு அமையாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | உறுப்புரையில் 9 ஆம் பந்தி. | | | |
| (ஈ) | 2017 பெப்ரவரி 28 திகதிய 04/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 03 ஆவது பந்தி | குறிக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு இனங்காது பட்டதாரிகள் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களாக இணைக்கப்பட்டிருந்ததுடன் 19 மாவட்ட அலுவலகங்களின் 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் இணைக்கப்பட்ட 173 பட்டதாரிகள் 2018 திசெம்பர் 31 திகதி வரையிலும் பயிற்சியாளர்களாக பணிக்கப்பட்டிருந்தனர். | அபிவிருத்தி நடவடிக்கைகள் அதிகம் காரணமாக இணைத்தலுக்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதி பெறப்படும் வரையில் பயிற்சியாளர்கள் ஈடு படுத்தப்பட்டனர். | இணைத்தலுக்காக குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக காணப்படுதல் வேண்டும். |
| (ii) | 04 ஆவது பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் இணைக்கப்படக் கூடிய பயிற்சியாளர்கள் எண்ணிக்கை மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் 10 சதவீதம் அல்லது 25 ஊழியர்கள் ஆகும். அவ் எண்ணிக்கை மீறப்பட்டு பயிற்சியாளர்கள் இணைக்கப்பட்டனர். | அபிவிருத்தி நடவடிக்கைகள் அதிகம் காரணமாக இணைத்தலுக்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதி பெறப்படும் வரையில் பயிற்சியாளர்கள் ஈடு படுத்தப்பட்டனர். | இணைத்தலுக்காக குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக காணப்படுதல் வேண்டும். |
| (iii) | 06 ஆவது மற்றும் 08 ஆவது பந்திகள் | பயிற்சியாளர்களின் பயிற்சி காலம் 06 மாதங்களுக்கு மேற்பட்டு நீடிக்க முடியாததாயினும் அக் காலம் மேற்பட்டு பயிற்சிக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | அபிவிருத்தி நடவடிக்கைகள் அதிகம் காரணமாக இணைத்தலுக்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதி பெறப்படும் வரையில் பயிற்சியாளர்கள் ஈடு படுத்தப்பட்டனர். | இணைத்தலுக்காக குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக காணப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2009 செப்தெம்பர் 01 திகதிய DMA/2009 (2) ஆம் இலக்க முகாமைத்துவ திணைக்கள சுற்றறிக்கை மற்றும் 2002 நவம்பர் 28 திகதிய 1A1/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை. | அதிகார சபையின் நிலையான சொத்து பதிவேடு மற்றும் கணனி பகுதிகள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்து தொடர்புடைய பதிவேடு மற்றும் லெஜர் காணப்படுவதுடன் புதிய கணனி நிகழ்ச்சித்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டு தற்பொழுது அதன் துல்லியம் உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிலையான சொத்து பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (ஊ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1 உறுப்புரை. | அதிகார சபையினால் 03 வருடங்களுக்காக பிரதான பெறுகை திட்டமொன்று மற்றும் விரிவான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டம் மற்றும் விரிவான பெறுகை திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரச பெறுகை வழிகாட்டிக்கு அமைவாக தேவையான ஆவணங்கள் பேணப்படுதல் வேண்டும். |
| (எ) | 2003 ஜூன் 02 திகதிய PED/12 ஆம் இலக்க பொது வியாபார சுற்றறிக்கையின் 9 ஆவது உறுப்புரையின் 9.4 ஆவது பந்தி | அமைச்சரவை அனுமதி இல்லாது அமைச்சுக்கள் மற்றும் வேறு அரச நிறுவனங்களுக்கு 26 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. | ‘செமட செவன’ வீட்டு திட்டத்திற்கு தொடர்புடைய வேலைகள் பணியமர்த்தப்பட்டுள்ளன. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் |
| (ஏ) | 1994 ஜூன் 14 திகதிய 96 ஆம் இலக்க பொது வியாபார சுற்றறிக்கை. | திறைசேரியின் அனுமதியில்லாது உதவி பொது மேலாளருக்கு (தகவல் மற்றும் பிரசாரம்) ரூபா 30,000 மாதாந்த கொடுப்பனவாக சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிக கடமைகளுக்காக பணிப்பாளர் சபையின் தீர்மாணத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படும். | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கூட்டிணைத்தல் வரிக்கு தொடர்புடைய உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகள் அடிப்படையில் செலுத்தப்பட்ட/ பெறப்பட்ட வரியுடன் சீராக்கப்பட்டு பெறப்பட வேண்டிய அல்லது செலுத்தப்பட வேண்டிய வரி அளவு கணக்கிடப்படுவதற்கு பதிலாக அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 8.76 மில்லியன் கூட்டிணைத்தல் வரி வருமான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வட் வரி சூத்திரத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு வரி திணைக்களத்தின் 'கூட்டிணைத்தல் வரி' கணக்கிலிடப்படல் மற்றும் தொடர்புடைய சட்டதிட்டங்களை பின் பற்றுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் குழுவின் மற்றும் அதிகார சபையின் செயற்பாட்டு விளைவுகள் முறையாக ரூபா 891.01 மில்லியன் மற்றும் ரூபா 999.36 மில்லியன் பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த ஆண்டின் பற்றாக்குறை முறையாக ரூபா 834.17 மில்லியன் மற்றும் 915.7 மில்லியனாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குழுவின் மற்றும் அதிகார சபையின் மீளாய்வாண்டின் நிதி விளைவு முறையாக ரூபா 56.84 மில்லியன் மற்றும் ரூபா 83.66 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் காணி விற்றல் வருமானம் ரூபா 65.41 மில்லியனால் குறைதல் மற்றும் மற்றைய கொடுப்பனவுகள் (பயிற்சி கொடுப்பனவு உள்ளடங்களாக) தகவல் மற்றம் பிரசார செலவு, ரூபா 133.79 மில்லியனால் மற்றும ரூபா 93.9 மில்லியனால் அதிகரித்தல் முக்கிய காரணங்களாக காணப்பட்டன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் பொதுமக்கள் விழா நடவடிக்கைகளுக்காக ரூபா 63.59 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் முன்னயை ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவில் 92 சதவீதம் அதிகரிப்பு காட்டப்பட்டிருந்தது.

(ஆ) காண்டோமினியம் சொத்து பரிமாற்றம் முறையாக மேற்கொள்ளப்படாததன் அடிப்படையில் அதன் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அதிகார சபையினால் ரூபா 282 மில்லியன் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 28 சதவீத அதிகரிப்பொன்று காட்டப்படுகின்றது..

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டு இறுதியில் நடைமுறைச் சொத்து விகிதம் 1.6.1 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் அது 1.7.1 ஆகும். அது போல மீளாய்வாண்டின் விரைவு சொத்து விகிதம் 1.6.1 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் 1.6.1 ஆக காணப்பட்டது. விரைவு சொத்து நிலையான விகிதமான 1.1 ஐ விட கூடிய மதிப்பு இரண்டு ஆண்டுகளிலும் காணக்கூடியதாக உள்ளதுடன் அது கடன்பட்டோர் வைப்பு மற்றும் முற்பணம் குறுகிய கால வைப்பு மற்றும் மற்றய நடைமுறை சொத்துக்களின் 86 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நடைமுறை ஆண்டில் மொத்த இலாபம் 51 சதவீதமாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் மொத்த இலாபம் 81 சதவீதமாகும். காணி விற்றல் வருமானம் முன்னைய ஆண்டிற்கு இணைவாக ரூபா 65.41 மில்லியனால் மற்றும் வீடு விற்றல் வருமானம் ரூபா 14.78 மில்லியனால் குறைதல் இதற்கு காரணமாகியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சை தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் கிராமங்களில் அடிக்கல் நாட்டல், திறப்பதற்கான பிரசார நடவடிக்கைகளுக்காக மற்றும் பெயர் பலகை கட்டமைப்பு பலகைகள், வீட்டு இலக்க தகடு தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக பிரதான அலுவலகம் மற்றும் 23 மாவட்ட அலுவலகங்களால் ரூபா 364.85 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அச் செலவுகளின் கூட்டுத்தொகை 2018 ஆம் ஆண்டின் பயனாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 826.36 மில்லியன் கடன் மற்றும் உதவிகளின் பெறுமதியுடன் ஒப்பிடும் போது 44 சதவீதமாக மட்டும் காணப்பட்டது. | முகாமைத்துவத்தினால் கருத்துரைகள் முன்வைக்கப்படவில்லை | அதிகார சபையின் செலவு வினைத்திறனாக மற்றும் பயனுள்ளதாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

## 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டிற்காக பௌதீக பொருள் ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டு காணப்படாததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பௌதீக பொருள் ஆய்வு அறிக்கையின் படி சொத்து முகாமைத்துவ பிரிவிற்கு சொந்தமான 51 பொருள் வகைகளின் 239 உருப்படிகள் பௌதீகமாக தொடர்புடைய பிரிவில் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | காணாமல் போன பொருட்கள் ரண் பொகுணக களஞ்சிய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. பரிசோதித்து பார்த்து தகவல்கள் முன்வைக்கப்படும். | சொத்து கட்டுப்பாடு முறையாக்கப்பட்டு சொத்துக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 28 ஆம் திகதி கூலி உடன்படிக்கை இல்லாமல் உதவி பொது மேலாலருக்கு (தகவல் மற்றும் பிரசாரம் ஒப்பந்த அடிப்படை) வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்திற்காக அதிகார சபைக்கு பெறப்பட வேண்டிய ரூபா 446,330 அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அவ் ஊழியர்களின் ஒப்பந்த காலம் 2019 சனவரியிலிருந்து முடிவுக்குட்பட்டிருந்தது. அது போல ஊழியர் வருங்கால வைப்பு நிதியம் மற்றும் ஊழியர் அறக்கட்டளை நிதியத்திற்கான பங்களிப்பு செலுத்தலின் குறைப்பாடு காரணமாக ரூபா 428,520 தண்டப்பணமும் ஓய்வூதிய பணிக்கொடை செலுத்தல் தாமதமாக்கல் காரணத்தினால் உதவி பொது மேலாளருக்கு ரூபா 203,669 கூடுதல் கட்டணமும் அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | உதவி பொது மேலாளரிடமிருந்து பெறப்பட வேண்டும். நிலுவை கூலி அறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதோடு ஊழியர் வருங்கால வைப்பு நிதி குறைவாக செலுத்தல்கள் காரணமாக தண்டக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. பணிக்கொடை செலுத்தல் தாமதமாகக் காரணத்தினால் உதவி பொது மேலாளருக்கு பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் இக் கூடுதல் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. | சட்டத்திற்குட்பட்ட கொடுப்பனவு விரைவாக அச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதிகார சபைக்கு பெறப்பட வேண்டிய பணம் விரைவாக அறவிடப்பட நடவடிக்கைக் எடுத்தல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 20.43 மில்லியன் பெறுமதியுடைய ஒதுக்கப்பட்ட வீடு, எஞ்சிய வீடு மற்றும் கடைகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து விற்பதற்கு மற்றும் அச் சொத்துக்களிலிருந்து அறவிடப்படப்பட வேண்டிய நிலுவை பணம் அறவிடப்படப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கப்பட்ட வீடுகளின் பெறப்பட வேண்டிய பணம் அறவிடப்படுவதற்கு மாவட்ட அலுவலகத்திலினூடாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் எஞ்சிய வீடுகளை விற்பதற்காக அமைச்சரின் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு தேவையான கடிதம் அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளன. | அதிகார சபையின் வீடு இருப்பு முறையாக முகாமைத்துவப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | இணக்க சான்றிதழ்கள் பெறப்படாமையின் அடிப்படையில் வீடு உரிமையாளர்களுக்கு தொடர்புடைய வீடுகள் மாற்றுவதற்கு இயலாமையினால் 2018 ஆம் ஆண்டில் தொகுப்பு வீடுகள் மற்றும் மாடி வீடுகளின் பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல்கள் நடவடிக்கைக்காக அதிகார சபையினால் ரூபா 290.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | தொகுப்பு வீடு சொத்துக் கட்டுமானத்திற்கு முன் காணி மாற்றப்படாமை, கட்டிட திட்டம் அனுமதிக்கப்படாமை மற்றும் இணக்க சான்றிதழ்கள் காணப்படாமையின் அடிப்படையில் வீடு சொத்து பயணாளர்களுக்கு மாற்றுவதற்கு முடியாதனால் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தலுக்காக அதிகார சபைக்கு செலவு ஏற்க நேரிட்டது. | தொகுப்பு வீடு சொத்தக்களின் உரிமை மாற்றல் மற்றும் தொடர்புடைய செயற்பாடு முறையாக மேற்கொண்டு அதிகார சபையின் செலவு பயனுள்ள வகையில் முகாமைத்துவப்படுதல் வேண்டும். |
| (இ) | வெளி நபர்களினால் காணி மற்றும் வீடு மாற்றல் , வீடு கட்டுமானம், பணிக்கொடைச் செலுத்தல்கள் மற்றும் ஊழியர் சிக்கல்களினால் ரூபா 31.4 மில்லியன் கூட்டுத்தொகை இழப்பீடு கோரப்பட்டட அதிகார சபைக்கு எதிராக 66 வழக்குகள் நீதிமன்றத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அதிகார சபையினால் 1,125 | முகாமைத்துவத்தினால் கருத்துரைகள் முன்வைக்கப்படவில்லை. | காணி மற்றும் வீடு மாற்றுதல் மற்றும் நிர்மாணித்தல் வினைத்திறனாக மற்றும் பயனுள்ள வகையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

வெளி நபர்களுக்கு நிறுவன கூலி செலுத்தாமை, காணி மாற்றப்படல் மற்றும் கடன் மீண்டும் அறவிடல் தொடர்பாக ரூபா 89.26 மில்லியன் இழப்பீடு கோரப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

### 3.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் 07 சந்தர்ப்பங்களில் கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 66 மில்லியன் முற்பணம் பின்னர் பெறப்படுகின்ற கட்டிட பொருட்கள் பெறுமதியில் ஈடு செய்தல்கள் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும் அதற்காக பெற்றுக்கொண்ட முறையான அனுமதியொன்று கணக்காய்வுக்கு முன்வைக்கப்பாட்டிருக்கவில்லை. அவ் ஆண்டில் குறிப்பிடப்பட்ட முற்பணத்தில் ரூபா 20.47 மில்லியன் மீண்டும் பணத்தில் செலுத்தப்பட்டிருந்தது. | தலைவரின் அனுமதியுடைய கடிதம் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக செலுத்தல் முறையாக முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இந்திய உதவியின் கீழ் தென் மாகாண விசேட வீட்டு திட்டத்தினூடாக 2018 ஆண்டினுள் 600 வீடுகள் ஆரம்பிப்பதற்கு மதிப்பிடப்பட்டு 25 வீடுகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் 581 வீடுகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வீடாயினும், 2018 ஆண்டு இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. சம்பத் செவண, செவண உதவி மற்றும் கிராம சக்தி வீட்டு நிகழ்ச்சி திட்டங்களின் கீழ் முறையாக 1,560 வீடுகள், 1,115 வீடுகள் மற்றும் 100 வீடுகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டு இறுதியில் முறையாக 152 வீடுகள், 12 வீடுகள் மற்றும் 72 வீடுகள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அது போல வேறுபட்ட நிகழ்ச்சி திட்டங்களின் கீழ் முறையாக கிராம சக்தி மற்றும் சம்பத் செவன 1,301 வீடு அலகுகள் | இந்திய உதவி வீடுகளுக்காக இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்திலிருந்து நிதி ஏற்பாடு பெற்றுக் கொடுக்க தாமதமாகியது அவ்வாறே, பயனாளர்களின் பங்கேற்ற நிதி ஏற்பாடு பரிமாற்றலில் ஏற்பட்ட தாமதத்தின் காரணத்தினால் வீடு நிகழ்ச்சித்திட்டங்களை தாமதமாகியுள்ளது. | செயற்பாட்டு நடவடிக்கைகள் வினைதிறனாக மற்றும் பயனுள்ளதாக செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 8,827 வீடு அலகுகளின் வேலைகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருப்பது 515 வீடு அலகுகள் மற்றும் 3,273 மட்டுமே ஆகும். | | |
| (இ) | 80/90 தசாப்பதங்களில் அநுராபுர மாவட்டத்தின் வரி அடிப்படையின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்ட 12 கிராமங்களுக்கு தொடர்புடைய 60.59 ஹெக்டெயர் 413 ஜன உதான காணி துண்டுகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 13.48 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் இப்பணம் அறவிடப்பட்டு பயனாளிகளுக்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படிருக்கவில்லை மேலும் அவ் தசாப்தத்தில் 03 ஜன உதான கிராமங்கள் 7.459 ஹெக்டெயர் சதுர அடி உடைய 44 காணி துண்டுகளின் பெறுமதி அதிகார சபையினால் மதிப்பிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாதிரி கிராமங்களை நிர்மாணிப்பதற்கு 2015 ஆண்டிலிருந்து 2018 ஆண்டு வரை பயன்படுத்தப்பட்ட அரசுக்கு சொந்தமான 77 காணித் துண்டுகள் மற்றும் காணி சீர்திருத்தல்கள் ஆணைக்குழுவிற்கு சொந்தமான 08 காணித்துண்டுகளின் உரிமை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதிகார சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மாற்றப்பட்டிராத காணியில் நிர்மாணிக்கப்பட்ட 03 மஹவ உதாகம உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து பெறப்பட வேண்டிய நிலுவை கூலி ரூபா 1.32 மில்லியனாகும். அது போல அநுராதபுர இபலோகம புலியன் குளம் வீட்டு திட்டதினை ஆரம்பிக்கும் போது அதற்கு தேவையான பரிந்துரை மற்றும் அனுமதிகள் பெறப்படாத தோடு 10 ஏக்கர் மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாற்றப்பட்டுள்ள காணிகளின் மதிப்பிடல் நடவடிக்கைகள் நிறைவு செய்து மதிப்பிடல் இலக்கம் குடியிருப்பவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. மாற்றப்படாத காணி மதிப்பிட முடியாது காணப்பட்டன. மாதிரி கிராமங்களை நிர்மாணிக்கப்பட்ட காணியும் சரியான நேரத்தில் மாற்றபபட்ட தாமதமாகியுள்ளது. | அதிகார சபையின் சொத்து கட்டுப்பாடு முறையாக செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | காணி கையேற்கப்படுதல் சட்டத்தின் 38(ஆ) உறுப்புரையின் படி அதிகார சபையினால் உடமை பெறப்பட்டிருந்த 72 காணி துண்டுகள் மாற்றப்படுவதற்கு பதிலாக செலுத்தப்பட வேண்டிய இழப்பாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 178.25 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ் பெறுமதிக்கள் 39 ஆண்டிற்கும் மேற்பட்ட பழைய மீதிகளும் உள்ளடக்கபட்டுள்ளதனால் மீளாய்வாண்டு இறுதி வரைக்கும் அவ் இழப்பீட்டு மற்றும் வட்டி தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பிரதேச செயலாளரினால் இழப்பீடு மதிப்பீடு தெரிவிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. அதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது . | காணி மாற்றப்படல் மற்றும் இழப்பீடு செலுத்தப்படல் செயற்பாடு வினைத்திறனாக செய்தல் வேண்டும் |

### 3.5 குறைபயன்பாடுடைய நிதியங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| செவன நிதிக்காக திறைசேரியிடமிருந்து மற்றும் வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட கொடை கணக்கில் மீளாய்வாண்டு இறுதியில் மீதி ரூபா 938.25 மில்லியன் காணப்பட்டாலும் நிதியத்தின் நோக்கங்களுக்காக 2018 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது ரூபா 70.25 மில்லியன் மட்டுமே ஆகும். | செவன நிதியத்தின் பணம் செவன கட்டுப்பாட்டு சபையின் அனுமதியுடன் கொடையேற்பவர்களின் விண்ணப்பங்களின் அடிப்படையில் விடுவிக்கப்படும். | வினைதிறனாக மற்றும் பயனுறுதியுடன் நிதியத்தினை பயன்பாடுகள் செய்தல் வேண்டும். |

### 3.6 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2003 ஜுன் 02 திகதிய PED/12 இலக்க அரச வியாபார சுற்றிக்கையின் 3.4 உறுப்புரைக்கு அமையாதவாறு மீளாய்வாண்டில் 38 ஊழியர்கள் அமைச்சரவை அனுமதி இல்லாது வேறு அரச நிறுவனங்களின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக அதிகார சபைக்கு ரூபா 71.04 மில்லியன் அறவிடப்பபட வேண்டியுள்ளதுடன் அதில் ரூபா 70.96 மில்லியன் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படாது காணப்பட்டது. | இப் பணம் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு பணிப்பாளர் சபை பத்திரிகையொன்று சமர்ப்பித்துள்ளது. | மனித வள முகாமைத்துவம் முறைமையாக்க வேண்டியதுடன் பெறப்பட வேண்டிய மீதிகள் அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

## 3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அதிகார சபையினால் நிர்வாக பதவிகளுக்காக ஊழியர்களை இணைக்கும் போது இணைத்தல் ஏற்பாட்டின் தகுதிகளுக்கு உள்ளடக்கப்பட்டுள்ள கல்வி தகைமைகள் இல்லாமை, பொது அறிவிப்புக்கள் வெளிப்படுத்தப்படாமை, கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சை வைக்காமை மற்றும் திறைசேரியின் அனுமதியில்லாமல் விசேட கொடுப்பனவுகள் சேர்க்கப்பட்டு சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே முகாமைத்தவ சேவை திணைக்களத்தினால் அதிகார சபைக்கு ஒப்பந்த முறையின் அடிப்படையில் 1,486 நியமனங்கள் அனுமதிக்கப்பட்டு இருப்பினும் 2019 பெப்ரவரி 28 ஆம் தகிதி அதிகார சபையினூடாக அனுமதிக்கப்பட்ட இணைத்தலுக்கான ஏற்பாட்டின் தகுதிகளுக்கு அமைவாகாது பதவி பெயர்களை வேறுபாட்டுடன் மற்றும் அனுமதிக்கப்படாத பதவிகளுக்காக 2,214 ஒப்பந்த நியமனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. 2018 ஆண்டிற்குள் முறையான அனுமதியொன்று இல்லாது 60 வயது பூரணமான 31 ஊழியர்கள் சேவை நீடிப்பினூடாக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | வீட்டு அபிவிருத்தி திட்டங்கள் விரைவாக செய்வதற்காக தொடர்புடைய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையின் அனுமதியின் அடிப்படையில் அபிவிருத்தி பணிகள் விரைவாக மேற்கொள்வதற்கு ஓய்வு பெற்ற ஊழியர்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர். | ஊழியர்களை இணைத்தல் முறைமைப்படுத்தல் வேண்டும். |

## 3.8 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| இயக்க குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 18 வாகனங்களுக்காக 2018 ஆண்டில் ரூபா 41.99 மில்லியன் குத்தகை கூலி செலுத்தப்பட்டிருந்தாலும் கூலி வாகனங்களுக்காகவும் 2018 ஆம் ஆண்டில் ரூபா 82.46 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டில் வாகன பராமரிப்பு செலவு ரூபா 20.47 மில்லியனாக காணப்பட்டது. | வீட்டு அபிவிருநத்தி பணிகள் விரிவாகல் மற்றும் வாகனங்கள் கொள்வனவிற்காக தேவையான அனுமதி பெறப்படாமையினால் கூலி வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறே பழைய வாகனங்கள் எப்போதும் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கப்பட்டு காணப்பட்டன. | வாகன கட்டுப்பாடு முறைமைப்படுத்தப்பட வேண்டியதுடன் அதிகார சபையின் செலவுகள் முறையாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு தொடர்பாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் செமட செவன மைய நோக்கத்துடன் நாடு முழுவதும் அனைத்து குடும்பங்களுக்கும் சுற்றாடல் நேயமுள்ள, நிலைபேறான, பண்புடைய நிலையான பாதுகாப்பு அடிப்படை வசதிகளுடன் வீட்டில் வசிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்தற்கான தேவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் வீடு கட்டுமானம் மற்றும் மேம்படுத்துவதற்காக கடன் மற்றும் நன்கொடை வழங்கல், வீடு நிர்மாணிப்பதற்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் ஏனைய உதவிகளை வழங்கல், குடியிருப்பாளர்களின் உரிமையை பாதுகாத்தல், தேவையான வீட்டு பத்திரம் வழங்கல் போன்ற பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்தல் தொடர்பாக அதிகார சபையின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக விருப்பத்தை காண்பிக்கும் தரப்பினரை அடையாளளப்படுத்திக் கொண்டு தொடர்புடைய நோக்கங்களை தயாரிக்கும் போது பங்கேற்பு அணுகுமுறை வரையறுக்கப்படல் அவதானிக்கப்பட்டதுடன் அப் பங்கேற்பின் வெற்றி குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன், அதிகார சபையினால் நிலைபேறான அபிவிருத்தியை அடைவதற்கு கட்டியெழுப்பப்பட்டிருந்த குறிகாட்டிகளின் வெற்றி கணக்கெடுப்பு காலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | முகாமைத்துவத்தினால் கருத்துரைகள் முன்வைக்கப்படவிலலை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்காக நிறுவனத்தினால் குறிக்கப்பட்ட பணிகள் அடையாளப்படுத்தப்பட்டு வருடாந்த திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துரைகள் முன்வைக்கப்படவிலலை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு ஆயத்தமாகும் போது மற்றைய நிறுவனங்களின் திட்டங்களுடன் நல் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படாத காரணத்தினால் குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கு திட்டங்களை தயாரித்தல் மற்றும் முன் ஆயத்த செயற்பாடுகள் பலவீனமான நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்தினால் கருத்துரைகள் முன்வைக்கப்படவிலலை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |